# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செச ரியா- சென்னை, வீர்ஜின், எதெல்பெர்கா, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி,ஜெயசேகரி-திண்டுக்கல், அனன்சியா மேரி, அருள் மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பவுலின்மேரி, பிலோமினாள் - கும்பகோணம் ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர், , லூயிஸ் ஜெசிந்தா, லோரா மேரி- தூத்துக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, ஜான்சி மேரி- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, புஷ்பமேரி, ஜெயமேரி - சிவகங்கை, சலேத்மேரி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், சகாயம் - கடலூர்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, சந்தனம், லீமா தெரஸ், ஞானசேகரன் - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா- திண்டுக்கல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், இமாக்குலேட், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, சற்பி - அரியலூர், லின்சி - திருநெல்வேலி, மேரி - இளையரசனேந்தல்,ஆன்டோ அவிவா - திருப்பத்தூர், சிப்ரியன் - தெளி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. வீர்ஜின் OSM - திருச்சி
அருட்சகோதரி. எதெல்பெர்கா - திருச்சி
அருட்சகோதரி. லூக்காஸ் மேரி - கும்பகோணம்
திருமதி. அமல செல்வி - திண்டுக்கல்
திரு. புஷ்பக்கண்ணு - கோவை
திருமதி. இருதய விஜிலா - திண்டுக்கல்

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# மங்கள வார்த்தை
## பதிப்பாசிரியர் பக்கம்


அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

அன்னை மரியாளின் பக்தர்களே, ஆகட்டும் இதழின் வாசகர்களே நாம் இப்போது தவக்காலத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தவக்காலம் என்பது ஒரு மனமாற்றத்தின் காலம், தயாரிப்பின் காலம் மற்றும் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய காலமுமாக இருக்கின்றது. கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமக்குத்தான் தவக்காலம் என்பது வெறும் 40 நாட்கள். ஆனால், அன்னை மரியாளுக்கு, எப்பொழுது கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை சொன்னாரோ அன்றுமுதல் அவர் விண்ணேற்றம் அடைந்தவரை தவக்காலமாகத்தான் இருந்தது.


வார்த்தை வலுவானது, வார்த்தை ஒருவரை வாழவும் வைக்கும், ஒருவரின் வாழ்க்கையையும் அழிக்கும், வார்த்தை ஆறுதலையும் தரும், வலியையும் தரும், வார்த்தை ஒருவரை புகழின் உச்சிக்கும் கொண்டு செல்லும் அவரை இகழ்ச்சிக்கும் உள்ளாக்கும். அதனால்தான் திருவள்ளுவர் அழகாகச் சொல்வார்,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு".

கடவுள் நமக்கு கொடுத்த உறுப்புகளிலே மிகவும் வலுவானது எதுவென்றால் இந்த நாக்குதான். இந்த நாக்கிலிருந்து பிறக்கும் வார்த்தைகளை நாம் மிகவும் கவனமாக கையாள வேண்டும். அதனால்தான் சொல்வார்கள் நாவடக்கம் என்பது மிகவும் முக்கியம்.



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| சிலுவை அருகில் நின்ற மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| ஆயிரம் துன்பம் சுமந்தவள் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| அமைதியைத் தேடி | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

அன்னை மரியாளுக்கு கபிரியேல் தூதர் சொன்ன மங்கள வார்த்தை என்பது ஒரு மகிழ்ச்சியின் வார்த்தை, புகழின் வார்த்தை. ஆனால் அன்னை மரியாளின் வாழ்க்கையில் இந்த வார்த்தைகள் மகிழ்ச்சியைக் கொண்டு வந்ததா என்றால் அதுஒரு மிகப் பெரிய கேள்விக்குறிதான். வார்த்தை என்னும் இயேசு அன்னை மரியாளின் வயிற்றிலே வாழ ஆரம்பிக்கின்றார். வார்த்தை வடிவம் பெற்று குழந்தையாக உருவம் பெற்று மண்ணிலே மனிதனாகப் பிறக்கின்றது. மகிழ்ச்சியான சூழ்நிலையில் அன்னை மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தாரா என்றால் இல்லை.

கபிரியேல் தூதர் சொன்ன வார்த்தை "நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்". அவர் சொன்னது போலவே குழந்தையும் பிறந்தது, குழந்தைக்கும் இயேசு என்று பெயரும் சூட்டப்பட்டது. ஆனால் மகிழ்ச்சி என்ற ஒன்று மட்டும் அன்னை மரியாளின் வாழ்க்கையில் எட்டாக்கனியாக இருந்தது. மங்கள வார்த்தை ஒன்றும் மங்களகரமான வாழ்க்கையை அன்னை மரியாளுக்கு கொடுக்கவில்லை. அதே தூதர் அன்னை மரியாளுக்கு சொன்னது "அவர் பெரியவராயிருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார், அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்".

ஞானத்திலும், அறிவிலும், ஆற்றலிலும் வளர்ந்த இயேசு பெரியவராயிருந்தாரா என்றால் நிச்சயமாக மறைநூல் வல்லுநர்களுக்கே விளக்கம் சொல்லுமளவுக்கு பெரியவராகத்தான் இருந்தார். ஆனால் ஒருபோதும் தன்னை பெரியவராகக் காட்டிக் கொள்ளவில்லை. பெரியவராக இருப்பதற்கும் பெரியவராகக் காட்டிக் கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. பெரியவராக இருப்பது என்பது அவரின் ஞான முதிர்ச்சியைக் காட்டுகின்றது. தன்னைப் பெரியவராக ஒருவர் காட்டுவது என்பது அவரின் ஆணவத்தைக் காட்டுகிறது. தமத்திருத்துவத்தின் இரண்டாம் நபர், உலகைப் படைத்த வார்த்தை என்பது எவ்வளவு பெரிய பெருமை. ஆனால் எந்தப் பெருமைகளையும் இயேசு தன்னுடைய தலையில் ஏற்றித் தன்னைப் பெரியராக இயேசு காட்டிக் கொள்ளவில்லை.

உன்னத கடவுளின் மகன்தான் இயேசு. ஆனால் இந்த உலகம் தொடக்கத்தில் அவரை உன்னத கடவுளின் மகனாக ஏற்றுக் கொண்டதா என்றால் இல்லை. உலகம் இவரை எவ்வாறு அழைத்தது தெரியுமா? இவர் யோசேப்பின் மகனல்லவா, இவர் தச்சரின் மகனல்லவா. உலகம் அவருக்கு சூட்டிய அடையாளம் அவரின் உண்மையான அடையாளத்தை மறைத்து விட்டது.

தாவீதின் அரியணையை அவர் பெறுவார் என்ற செய்தி சொல்லப்பட்டாலும் ஆண்டவர் இயேசு தாவீது அரசர் பிறந்த பெத்லகேம் நகரில் பிறக்கின்றார். ஆனால் ஒருபோதும் தாவீது போல அரசர் ஆகவேண்டும் என்று முயன்றது கிடையாது. எத்தனையோ வாய்ப்புக்கள் அவருக்கு கிடைத்தது. ஆனால் ஒருபோதும் அந்த வாய்ப்புக்களை இயேசு பயன்படுத்தவில்லை. அன்னை மரியாளுக்கு சொல்லப்பட்ட மங்கள வார்த்தைகள் அனைத்தும் நிறைவேறியது அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால், அவை மங்களகரமாக நிறைவேறியதா என்றால் இல்லை என்பதுதான் உண்மை.

**மங்கள வார்த்தை எப்போதும் மகிழ்ச்சியைத் தருவதில்லை. ஒருசில நேரம் மகிழ்ச்சி மங்கலாகக்கூட இருக்கலாம்.**





நான் கருவுற்ற போது நிறைய பிரச்சனைகள் இருந்தது. இரத்தப்போக்கு அதிகமாக இருந்தது. நான் பாப்பாவுக்கு ஏதாவது பிரச்சனை ஆகும் என்று மாதாவிடம் விண்ணப்பித்தேன். அன்னையின் கருணையால் குழந்தைக்கு எந்த ஒரு பிரச்சனையும் வரவில்லை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு 10 வருட காலமாக குழந்தை வரம் இல்லை. மாதாவிடம் மன்றாடினேன். மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

8-ம் பக்க தொடர்ச்சி .........

நாமும் துன்புறுவோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்வோம். இதையே மத்தேயு செய்தியாளர் தனது நற்செய்தியின் 25 ஆம் அதிகாரத்தில், நான் பசியாய் இருந்தேன், தாகமாய் இருந்தேன், ஆடையின்றி இருந்தேன், அந்நியராக இருந்தேன், நோயுற்றிருந்தேன், சிறையில் இருந்தேன். அப்பொழுதெல்லாம் என்னுடைய தேவைகளை நிறைவேற்றினீர்கள் என்று சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளுக்கு மேற்கூறிய உதவிகளை புரிந்ததை தனக்கே செய்ததாக உளம் மகிழ்கின்றார். பாராட்டுகின்றார். பரிசினை வழங்குகின்றார். எனவே நாமும் துன்புறுகின்ற சகோதர சகோதரிகளுக்கு உதவும் போதெல்லாம் இயேசுவுக்கே உதவுகின்றோம்.

மூன்றாவதாக, அன்னை மரியா, தனது வாழ்வில் வரும் சிலுவைகள் அனைத்தையும் அமைதியுடனும், நம்பிக்கையுடனும் இறைத்திருவுளத்திற்குப் பணிந்தும் ஏற்றுக் கொண்டார். சிலுவையின்றி வெற்றி இல்லை, துன்பமின்றி இன்பம் இல்லை. இம்மையில் நாம் படும் துன்பங்கள், நாம் அடையவிருக்கின்ற மாட்சிக்கு முன் ஒன்றுமே இல்லை என்று பவுலடிகளார் கூறுகின்றார். நாமும் அன்னையைப் போன்று, துன்பங்களை அமைந்த மனதுடன் ஏற்று, அவற்றின் வழியாக இறைவன் என்ன உணர்த்துகின்றார் என்ற செய்தியை உற்றுக் கேட்போம். 'சிலுவைகள் தந்து நீ ஞானம் தந்தாய்" என்ற பாடலின் வரி நம்மை அதிகம் சிந்திக்க வைக்கின்றது. இயேசுவின் சீடர்களுக்கு அழகு, அவர்தம் வாழ்வில் வரும் சிலுவைகளைத் தூக்கிக் கொண்டு, நம்மை அழைத்தவரைப் பின் செல்வது. அதைப் போன்று அன்னை மரியாவின் சீடத்துவம் அமைந்திருந்தது. இயேசுவின் சிலுவையை, இயேசுவின் பாடுகளைத் தாங்கிக் கொண்டு, அதன் வழியாக மீட்புத் திட்டத்தில் தனக்கிருந்த பங்கை அளித்தார். நாமும் நமக்கு வரும் சிலுவைகளை மீட்பின் சாதனங்களாக மாற்ற முயல்வோம். துன்பம் எனும் பாதையில் துணிவுடன் செல்வோம். சிலுவையின் நிழலில் நாம் பயணிக்க நேரிடும் போது, அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் தொடர்ந்து முன்னேறிச் செல்ல அன்னையிடமிருந்து கற்றுக் கொள்வோம்.

நான்காவதாக, நமது வியாகுல அன்னை துன்பங்களைத் தனது வாழ்வில் ஏற்றார். வியாகுலங்களை தனது உள்ளத்தில் அனுபவித்தார். ஆனால் யாருக்கும் அவர் துன்பங்களைத் தரவில்லை. யாரையும் கண்ணீர் கலங்க வைக்கவில்லை. யார் மீதும் சிலுவையை சுமத்தவில்லை. மகனோடு சேர்ந்து கொடுமை இழைத்தவர்களை மனதார மன்னித்தார். நாமும் யாருக்கும் துன்பம் இழைக்காதிருப்போம். யார் மீதும் சிலுவைகளை சுமத்தாதிருப்போம். நமக்குத் துன்பம் தருபவரை மனதார மன்னிப்போம். இதற்கான அருள் வரங்களை, சிலுவை அருகில் நிற்கும் புனித வியாகுல அன்னையிடமிருந்து பெற்றுக் கொள்வோம்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

பிப்ரவரி மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சேலம்**

நான் என் மகனுக்கு திருமணம் நடத்துவதற்கு பணம் இல்லாமல் தவித்தேன். ஜீவ மாதாவிடம் மனமுருகி மன்றாடினேன். மாதாவின் அருளால் என் மகளுக்கு நல்ல முறையில் திருமணம் நடைபெற்றது மேலும் குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. என் கால்வலியிலிருந்தும் விடுதலை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மைக்கேல்ராஜ், மெர்ஸி**

எனக்கு திருமணம் நடந்து 5 ஆண்டுகள் ஆகிறது. 2 வருடம் கடந்தும் குழந்தை இல்லை. 3-ம் வருடம் குழந்தை வரம் வேண்டி மாதாவிடம் மன்றாடினேன். போன வருடம் திருவிழாவில் வேண்டினேன். இந்தத் திருவிழாவில் மாதா மழலை வரம் தந்தார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கீதா**

எனக்கு நிறைய கடன் பிரச்சனைகள் இருந்தது. மாதாவிடம் வேண்டினேன். எல்லா கடன் பிரச்சனையும் தீர்ந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

நான் இரண்டாவது முறையாக கருவுற்றிருந்தேன். இந்தக் குழந்தை கருச்சிதைவு ஆகும் என்று கூறினார்கள். திரும்ப, திரும்ப அதேபோல் ஆனது. 3 மாதம் ஆனதும் திரும்பவும் மருத்துவமனைக்கு சென்று ஆய்வு செய்து பார்த்ததில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று தெரியவந்தது. குழந்தை நல்ல முறையில் இருக்கிறது என்று மருத்துவர் கூறினார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றனி ஷாஜி ம.ஊ.ச



**அமைதியின் அன்னை**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஓர் போர்வாள் இருந்தது. அது ஒரு கூர்மையான விலைமதிப்புமிக்க போர்வாள். அந்நாட்டின் அரசன் இந்த போர்வாளை பயன்படுத்தாமல் இருந்தான். போரில் பங்கெடுத்து எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டும் என்று போர்வாள் ஆசை கொண்டது. அண்டை நாட்டு அரசனோடு சலசலப்பு ஏற்பட்டு போர்மூண்டது, போர்வாள் மிகவும் மகிழ்ச்சி கொண்டது. போர் ஆரம்பித்து, தன்னுடைய பணியை சிறப்பாக செய்தது போர்வாள். முதல்நாள் போர்முடிந்து திரும்பும்போது வழியோரம் வெட்டுண்டு கிடந்த தலை, கால், கைகளைப் பார்த்து போர்வாள் மனம் கலங்கியது. இந்தப் போரை கைவிட்டு அமைதியை ஏற்படுத்த ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்று எண்ணியது. அரசனும் படைவீரர்களும் ஓய்வெடுக்கும் நேரத்தில் போர்வாள் ஓர் அதிர்வு ஓசையை எழுப்பியது. இந்த ஓசையைக் கேட்டு மற்றொரு வாளும் பதிலுக்கு அதிர்வு ஓசையை எழுப்பியது. உடனே, நாம் தவறு செய்கிறோம், நாம் பல உயிர்களை காவு கொள்கிறோம் என்றது போர்வாள். மற்றொரு வாளும் இதே கருத்தைக் கூறியது. இந்த இரண்டு வாளும் சேர்ந்து அதிர்வு ஓசையை எழுப்பி அனைத்துக் கருவிகளுடனும் பேசியது. அனைத்துப் போர் கருவிகளும் ஆம் நாம் தவறு செய்கிறோம் என்று ஒப்புக் கொண்டன. எதிரி நாட்டு அரசனின் கூடாரத்தில் இருக்கும் போர் கருவிகளை அதிர்வு ஓசையின் மூலம் தொடர்பு கொண்டு பேசியது போர்வாள். அந்த கருவிகளும் நாம் செய்வது தவறு என்று ஒப்புக்கொண்டன. இப்போது இருநாட்டு போர்க்கருவிகளும் இணைந்து போரை கைவிட திட்டம் தீட்டின. திட்டத்தின்படி அனைத்து போர்க்கருவிகளும் குறிப்பிட்ட இடைவெளியில் அதிர்வு ஓசையை பலமாக தொடர்ந்து எழுப்பி இருநாட்டு போர்வீரர்களையும் தூங்கவிடாமல் செய்தன. சரியான தூக்கம் இல்லாததால் மறுநாள் காலையில் இருநாட்டு வீரர்களும் தூக்க கலக்கத்தில் இருந்தார்கள், ஆகவே போர் அன்று கைவிடப்பட்டது. போர்வாளின் முயற்சியால் தொடர்ந்து சில நாட்கள் போர் தடைப்பட்டது. இந்த இடைவெளியில் இருநாட்டு அரசர்களும் பகையை மறந்து நண்பர்களாயினர். போரை கைவிட முடிவெடுத்தனர். போரை வென்றது போர்வாள்.

இயேசுவே உலகிற்கு வாக்களிக்கப்பட்ட அமைதி. இந்த அமைதியை நமக்கு பெற்றுக் கொடுத்த போர்வாள் அன்னைமரியா. உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தவருக்கு அமைதி உண்டாகுக(லூக் 2:13-14) இறைவிருப்பத்தை நிறைவேற்றும் போது இறை அமைதியை கண்டடைவர் என்கிறார் ஒரு கவிஞர். சாதி, மதம், மொழி என்று பல வேறுபாடுகளால் அமைதியை இழந்து ஒரு பதட்டமான சூழலில் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த தவக்காலத்தில் அன்னை மரியாவோடு இணைந்து இறை அமைதியை அனுபவித்து, சமதாயத்தில் அமைதியை நிலைநாட்ட நாம் அழைக்கப்படுகின்றோம். ஆகவே, அன்னையின் வழியில் பயணித்து அமைதியை நமதாக்குவோம், அமைதியின் கருவிகளாக மாறுவோம்.

# சிலுவை அருகில் நின்ற மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

தவக்காலத்தின் மூன்றாவது வாரத்திற்குள் நுழைகின்றோம். நம் மீட்பராம் இயேசுவின் பாடுகள், மரணம் ஆகியவற்றை மீண்டும் மனதில் நிறுத்தி, தியானித்து, நமது வாழ்வைப் புதுப்பித்துக் கொண்டு உயிர்ப்புப் பெருவிழாவில் மகிழ்வுடன் பங்கேற்க நம்மைத் தயாரித்து வருகின்றோம். செபம், தவம், தானம் மற்றும் பிறரன்பு செயல்களில் நம்மை ஈடுபடுத்தி வருகின்றோம். இயேசுவின் சிலுவைப் பாதையில் பயணிக்கும் போது, அவரோடு கல்வாரி வரைக்கும் பின் தொடர்ந்த வியாகுல அன்னையையும், அவரது வியாகுலங்களையும் தியானிக்கின்றோம். அவருக்கும் நமது ஆறுதலையும் அளிக்க விரும்புகின்றோம். இயேசு உடலிலும், உள்ளத்திலும் வேதனைகளை அனுபவித்தார். மரியா விவரிக்க முடியாத துன்ப சாகரத்தில் மூழ்கி அனைத்து வலிகளையும் தனது இதயத்தில் தாங்கினார். இவ்வாறு இறைவாக்கினர் சிமியோனின் கூற்று உண்மையானது. ஒரு வாள் அல்ல, ஓராயிரம் வாட்கள் அவரது இதயத்தை ஊடுருவின. ஆனால் நமது தாய் ஆழ்கடல் அமைதியில் உறைந்திருந்தார். சிலுவை சுமந்து வரும் மகனை எதிர்கொண்டார். கண்களால் சந்தித்தார். மௌன மொழிகளை உதிர்த்தார். அவரது உற்று நோக்கிய பார்வையும், ஆழ்ந்த அமைதியும் அன்பு மகன் உடலிலும் உள்ளத்திலும் உரம் பெற்று சிலுவையைச் சுமந்து செல்ல ஊக்கமூட்டின. தாயின் உடனிருப்பு ஆறுதல் அளித்தாலும் அவர் படும் வேதனை, மகனின் இதயத்தையும் அம்புகளால் ஊடுருவின. கல்வாரியில் சிலுவைப் பயணம் நிறைவுற, தனது ஆவியைத் தந்தையின் கையில் ஒப்படைக்குமுன், தனது அன்புத் தாயை நமக்குத் தாயாக கொடுத்தார். முப்பது ஆண்டுகள் சீராட்டி வளர்த்த செல்வ மகனை உலகின் மீட்பராக இம்மானுடத்திற்கு வழங்கினார். அவரது அன்னையை நமக்குத் தாயாக சிலுவையருகில் கொடுத்தது நாம் பெற்ற பேறு. சிலுவை அருகில் நிற்கும் மரியா நமக்குத் தரும் செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**சிலுவையின் நிழலில் மரியா**

தாய்த் திருஅவையில் திருச்சிலுவை உயர்த்தப்பெற்ற திருவிழா செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள் சிறப்பிக்கப்படுகிறது. அதற்கு அடுத்த நாள் அன்னை மரியாவின் வியாகுலங்களுக்கு விழா எடுத்து மகிழ்கின்றோம். அன்றைய நாளின் திருவழிபாட்டிலே மிகவும் அருமையான ஒரு புகழ்ச்சி இடம்பெறுகிறது. அதில் மரியாவை, சிலுவையடியிலே நின்று சாகாமலே வேதசாட்சியின் முடியைப் பெற்றார் என்று திருஅவை புகழ்கின்றது. மரியா ‘ஆகட்டும்” என்று ஆண்டவரின் தூதர் வழியாக இறைவனிடம் தன்னை மீட்புத் திட்டத்திற்கு கையளித்த நாள் முதல் சிலுவையின் நிழல் அவரைத் தொடர்ந்தது. இறைமகனுக்குப் பிறக்க ஒரு இடம் கிடைக்கவில்லை. தீவனத் தொட்டியில் பச்சிளம் குழந்தையைக் கிடத்தினபோது அவரது உள்ளம் அடைந்த வேதனை குழந்தை பிறந்த நாற்பதாம் நாள் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கும் போது இறைவாக்கினர் சிமியோனின் கூற்று, ஏரோதுக்குப் பயந்து அகதியாக தப்பித்துச் சென்றது, சிறுவன் இயேசு பன்னிரெண்டாம் வயதில் காணாமற்போனது அனைத்தும் அன்னையைப்





விண்ணிற்கு ஏறிச் செல்லும் ஏணி என எண்ணி
இயேசுவின் சிலுவைப்பாட்டின் பங்கென ஏற்று
இறைவனுக்கு அவற்றை அர்ப்பணமாக்கினால்
அத்துன்பங்கள் அனைத்தும் இறை ஆசீராகும்
இதயத்தில் அமைதி நிலவிப் பெருகும்.

பாவம் நம்மை அமைதியின்மைக்கும்
தோல்விக்கும், துன்பத்திற்கும் இட்டுச்செல்கிறது
பாவத்திற்கு அடிமையானால்
அமைதி குலையும், அகம் கலக்கமடையும்,
குற்ற உணர்வு ஏமாற்றம் மனதை வாட்டும்.
என் சிறுமையையும் வருத்தத்தையம் பாரும்
என் பாவங்கள் அனைத்தையும்
மன்னித்தருளும் (திபா 25:15)- என
பாவங்களை அறிக்கையிட்டு
ஒப்புரவு அருட்சாதனம் பெறும்போது
அகத்தில் ஆழ்கடலில் அமைதியும்
மகிழ்வும் பெறுவது உறுதி.

புண்பட்ட நெஞ்சுக்கு –
அடுத்தவரின் ஆறுதலைவிட மறைவாக்குகளே
அமைதியும் ஆறுதலும் தரும் அருமருந்து
இயேசு அன்பரின் ஆறுதல்தான்
மெய்யான ஆறுதல்.
எனவே துன்ப வேளையில்

இறைபதம் சரணடைவோம்
துன்பங்களை விண்ணிற்கு ஏறிச்செல்லும் ஏணியாக ஏற்போம்
இயேசுவின் சிலுவைப்பாட்டின் பங்கெனக் கொள்வோம்
பாவங்களை அறிக்கையிட்டு இறைமன்னிப்பை மன்றாடுவோம்
விண்ணப்பங்களை எடுத்துரைத்துச் செபிப்போம்
இறைவாக்குகளைப் படித்துத் தியானிப்போம்.

அமைதியின் தெய்வம் நம் உள்ளத்தையும்
இல்லத்தையும் உலகையும் ஆளட்டும்.

# அமைதியைத் தேடி

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

குழந்தையின் அமைதி தாய்மடியில்
உள்ளத்தின் அமைதி உன்னதரின் காலடியில்
தனிமனித உள்ளத்து அமைதியே இல்லத்தின் அமைதி,
சமூகத்தின், நாட்டின், உலகின் அமைதி,
மனித இதயத்தில் நிகழாதவை எதுவும்
உலகில் நிகழ்வதில்லை.
உள்ளத்து உணர்வுகள் கட்டுப்பாடின்றி
பொங்கி எழும்போதுதான்
பிரச்சனைகள், போராட்டங்கள் உருவெடுக்கின்றன.
திருப்பாடல் 13:12-இல் காண்பது

> "என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது
> தாய்மடி தவழும் குழந்தையென
> என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது"
> போராட்டம் உள்ளத்திலோ இல்லத்திலோ
> எத்தகையதாய் இருப்பினும்
> இறைத்தந்தையிடம் புகலிடம் தேடி
> அவர் பாதம் சரணடைந்தால்
> அமைதியும் ஆனந்தமும்
> ஆழ்ந்த உறக்கமும் நமதாகும்.

"எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய
இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம்
உங்கள் விண்ணப்பத்தைத் தெரிவியுங்கள். அப்பொழுது அறிவெல்லாம்
கடந்த இறை அமைதி, கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள்
உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்"(பிலி 4:6-7)
துன்பங்கள் நம்மை வாட்டும்போது- துவண்டுபோகாமல்
துன்பத்தின் காரணத்தைப் பிறர்மேல் சுமத்தாமல் - அவை





பக்குவப்படுத்தியது. கல்வாரி மலையில், சிலுவையில் தனது மகனையே தகனப்பலியாக்கும் மீட்பின் நிகழ்வுக்குத் தயாரித்தது.

இயேசுவின் பொது வாழ்வில், அரசியல், சமயத் தலைவர்கள் மக்களை அவருக்கு எதிராகத் தூண்டியது, எதிர்க்கப்படும் அறிகுறியாக அவரைப் பார்த்தது, பெயல்செபூலைக் கொண்டு சாத்தானை ஓட்டுகிறார் என்று பழித்துரைத்த போது, நமது அன்னை சொல்லொண்ணா வேதனைக் கடலில் மூழ்கினார். ஆயினும் துன்பங்கள் வழியே, மீட்பு உண்டு என்பதை உணர்ந்திருந்தார். இறை அருளை நிரம்பப் பெற்றவராகவும், தூய ஆவியாரின் வழிநடத்துதலை உணர்ந்தவராகவும் இருந்ததால், இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டார். தன்னை ஆண்டவரின் அடிமையாகவே கையளித்து மீட்புப் பணியில் தனது பங்கினை நிறைவேற்றுவதில் முனைப்பாய் இருந்தார்.

**சிலுவை அருகில் நின்ற மரியா**

யோவான் தமது நற்செய்தியில் இப்பகுதியை மிக அழகாக, ஆழ்ந்த இறையியலை உள்ளடக்கிச் சித்தரிக்கின்றார். 'சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர்" (யோவான் 19:25). மூன்று ஆண்டு காலம் தம் தலைவரும், போதகருமான இயேசுவோடு சேர்ந்து உண்டும், உறங்கியும், மகிழ்ந்தும் இருந்த சீடர் குழுமம் சிதறுண்டு போன வேளையில், துணிவுடன் பெண் சீடர்கள் அன்னை மரியாவின் தலைமையில் இயேசுவின் மீட்பின் நேரத்திற்குச் சான்று பகர்ந்து நின்றனர். சிலுவையின் நிழலில் பயணித்த மரியா அதன் அடியில் வீரமுடன் நின்று கொண்டிருந்தார். கல்வாரிப் பயணத்தின் போது இடம் பெற்ற ஒவ்வொரு நிகழ்வையும் தன் உள்ளத்தில் பொக்கிஷமாய்ப் பொதிந்து தியானித்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

எங்கள் பங்குக் கோவிலில் சிலுவைப் பாதை செபிக்கும் போது அங்கு காணப்படும் 11, 12 ஆகிய நிலைகளில் அமைந்துள்ள சித்திரங்களைப் பார்ப்பவர்கள் அனைவருக்குமே அதிக வேதனையைத் தரும். இயேசுவை சிலுவையில் அறையும்போது அதைக் காண சகியாமல் மரியா தனது முகத்தை யோவானின் தோள் மீது புதைக்கின்றார். அடுத்த நிலையில் இயேசு உயிர் விடும் போது அவர் அருகில் மிக நெருக்கமாகச் செல்ல விரையும் போது யோவான் அவரைத் தடுத்து நிறுத்துகிறார். அன்னையின் வேதனையின் உச்சக் கட்டத்தை உய்த்துணர்ந்த ஒருவரின் உணர்வுகளின் வெளிப்பாடாக இவைகள் காணப்பட்டாலும், நாம் ஒரு உண்மையை அறிந்து கொள்கிறோம். நமது அன்னையின் தகைமை உள்ளம், இறைச் சித்தத்திற்குப் பணிதல், இறைவன் அனைத்தையும் நிகழ்த்துகிறார் என்ற அசையா நம்பிக்கை ஆகிய தெய்வீகப் பண்புகள், சிலுவையின் அருகில் சோர்வுறாமல், துவளாமல் நின்று கொண்டிருந்த வியாகுல அன்னையிடம் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

தனது அன்புத் தாய் அனுபவிக்கும் வியாகுலங்களின் மத்தியிலும் வீரத்துடன் சிலுவை அருகில் நிற்பதைக் கண்டு எல்லாக் காலத்திலும் வேதனை, துன்பம், வறுமை, பிரிவு என்ற அனைத்து வகையான சிலுவைகளிலும் அறையப்படும் எண்ணற்ற மாந்தரின் சிலுவைகளின் அடியில் நிற்க இயேசு மரியாவுக்கு அழைப்பு விடுக்கின்றார். 'இயேசு தம் தாயையும், அருகில் நின்ற தம் அன்பு சீடரையும் கண்டு, தம் தாயிடம் அம்மா இவரே உம் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம் இவரே உம் தாய் என்றார்" (19:26-27).

யோவான் இங்கு திருஅவையின் அடையாளமாக இருக்கிறார் என்று இறையியலாளர்கள் கூறுகின்றார்கள். அதாவது, திருஅவைக்குத் தனது அன்னையை யோவான் வழியாக தாயாக அளிக்கின்றார் என்பது பொருளாகும். திருஅவையின் தாயாக மட்டுமல்ல, இந்த உலகின் அன்னையாக ஒப்படைக்கப்படுகிறார் என்றும் நாம் கூறலாம். யோவான் மட்டும் அன்னையின் மகன் அல்ல, மாறாக நம் அனைவருக்கும், இன்னும் இந்த உலகில்

பிறக்கவிருக்கும் அனைவருக்கும் அவர் தாயாகத் திகழ்வார் என சிலுவையிலிருந்து தனது உயிர் பிரியும் வேளையில் ஒரு சாசனமாக இயேசு தனது தாயை நமக்குத் தாயாக தாரை வார்த்துக் கொடுக்கும் இந்நிகழ்வை ஒரு அனுபவமாக உள்ளத்தில் உணர்வோம்.

யோவான் நற்செய்தியின் இப்பகுதியை இன்னும் ஆழமாக சிந்திக்க, மேலும் பல உண்மைகள் நமக்குப் புலப்படும். இங்கு நற்செய்தியாளர் சிலுவையில் நிற்கும் மரியாவின் நம்பிக்கையை உயர்த்திக் காட்டுகின்றார். கல்வாரியில் மரியாவின் நம்பிக்கை சோதிக்கப்படுகின்றது. இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரை எத்தனையோ நிகழ்வுகளில் அன்னையின் நம்பிக்கை பரிசோதிக்கப்பட்டாலும் கல்வாரியில் அது உச்சக் கட்டத்தை நெருங்கியது. இயேசுவின் பிறப்பின் அறிவிப்பின் போது அவர் உதிர்த்த 'ஆகட்டும்" என்ற சொல்லே அவர் இறப்பின் போதும், மரியாவின் உள்ளத்தின் ஆழத்தில் ஒலித்தது. இவ்வாறு மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற நம் அன்னை அத்தனை துன்பங்களையும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு துணிவுடன் ஏற்றுக் கொண்ட நிலையை, 'நின்று கொண்டிருந்தார்" என்று அழுத்தம் கொடுத்து, அவரை நமக்கு நம்பிக்கை வாழ்வின் சிறந்த மாதிரிகையாகக் காட்டுகின்றார்.

கல்வாரியில் சிலுவையின் அருகில் நின்ற மரியா இயேசுவின் தாயாக மட்டுமல்ல, அவரின் ஒப்பற்ற சீடத்தியாகவும் நிற்கின்றார். இயேசு அருள் அடையாளங்கள் ஆற்றி அனைவராலும் புகழப்பட்ட வேளையில் சீடர்கள் அவர் அருகில் தோள் கொடுத்து தோழராய் நின்றனர். ஆனால், அவர்கள் துன்புறும் ஊழியனின் கோலத்தைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தனர். மரியாவோ, இயேசுவில் இறைமாட்சி மிளிர்ந்த போதும், சக்தியை இழந்து வலுவற்ற நிலையில் சிலுவையில் தொங்கிய போதும், அவர் இயேசுவை நெருங்கிப் பின்சென்றார். மரியா தனது மகன் என்ற இரத்த உறவிலிருந்து திருஅவையின் மக்கள் அனைவரையும் தம் மக்களாக ஏற்றுக்கொள்ளும் அழைப்பைப் பெற்றார். இயேசுவின் பிறப்பின் அறிவிப்பின் போது மரியா இயேசுவுக்குத் தாய். அவரது இறப்புக்குப் பின் மரியா திருஅவையின் ஆன்மீகத் தாயாகின்றார்.

கானாவூர் திருமணத்தில் 'எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்று கூறிய போது, அவரது நேரத்தை உணர்ந்தவராய், அங்கிருந்த பணியாளர்களிடம் தண்ணீர் நிரப்பக் கூறினார். சுவையான இரசம் பொங்கி வழிந்தது. இயேசுவே அந்த புதிய இரசம் என்று உலகிற்குப் பறைசாற்றினார் மரியா. கல்வாரியில் இயேசு, தந்தையின் கையில் தன்னை ஒப்படைக்க அந்தக் குறிப்பிட்ட நேரம் வரும் வரை மரியா காத்திருந்தார். குத்தி திறக்கப்பட்ட அவரது இதயத்திலிருந்து இரத்தமும் நீரும் வழிந்தோடும் புதிய இரசமாம் திருஅவையின் திரு அருட்சாதனங்கள் பிறந்ததற்கு சான்று பகர்ந்தார். மீட்பின் வரலாற்றில் இறைவன் மரியாவுக்கு அளித்திருக்கும் பங்கினை நினைத்து வியப்படைகின்றோம்.

**நிறைவுரை**

சிலுவை அருகில் நிற்கும் மரியா ஒரு சில பாடங்களை நமக்குக் கற்றுத் தருகிறார். அன்று சிலுவையின் அருகில் நின்றவர் இன்றும் நிற்கின்றார். என்றும் நிற்பார். சிலுவையில் அறையப்பட்டிருக்கும் எண்ணற்ற மக்களின் அருகில் நின்று அவர்கள் உயிர்ப்பின் ஆற்றலைப் பெற உறுதுணையாய் இருக்கின்றார்.

இரண்டாவதாக, அன்னையைப் போன்று நாமும் நம் சகோதர சகோதரிகளின் அருகில் நிற்க வேண்டும். அவர்களுக்கு நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஆற்றலை உணர்த்த வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். நமது உடனிருப்பு, அன்பான வார்த்தைகள், இரக்கச் செயல்பாடுகள் வழியாக இயேசுவின் உயிர்ப்பின் ஆற்றலை உணர்த்தலாம். அன்னை மரியா, துன்புறுவோரில் இயேசுவின் முகத்தையே காண்கிறார். அவரைப் போன்று

தொடர்ச்சி 33-ம் பக்கம்.........





இயேசு தமது உயிர் பிரியும் பொழுது யோவானிடம் இதோ உன் தாய் என அன்னையை ஒப்படைக்கிறார். அதே அன்னையிடம் இதோ உன் மகன் என யோவானை ஒப்படைக்கிறார். ( யோவா 19:25-27) மரியா இயேசுவின் அன்பு சீடருக்கு அன்னையாவதன் வழியாக கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும் அனைவருக்குமே அன்னையாகினார். தன்மகன் குற்றுயிரும், குலையுயிருமாய் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் பொழுதும் தன்னை யோவானிடம் ஒப்படைக்கும் பொழுதும் அந்த தாயின் மனது எப்படி பதை பதைத்திருக்கும்? இப்படிப்பட்ட ஒரு நிலையை நம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா ? ஆனாலும் நம் அன்னை இந்த சந்தர்ப்பத்திலே சிறிதும் மனம் தளராமல் நம்பிக்கையோடு இருந்தார். காரணம், ஒருவேளை தன் மகன் மூன்றாம் நாள் கண்டிப்பாக உயிர்த்தெழுவான் என்ற நம்பிக்கை அவளின் மனதிலே வேரோடிப்போய் இருக்கும். இருந்தாலும் தன் மகனின் கொடூர நிலையைக் கண்டு அவள் எவ்வளவு துடித்து இருப்பாள். எல்லாம் இறைவனின் சித்தப்படி நடக்கிறது என்றாலும், இந்த கொடூர மரணம் அவளது மனதை எவ்வளவு துன்புறுத்தி இருக்கும்.. இயேசுவின் இளமைப் பருவம் அவரது பொதுவாழ்வு, பாடுகள் மற்றும் உயிர்ப்பு வரை மரியா தன் மகன் இயேசுவை பின் தொடர்ந்தார் அதனாலே அவர் இயேசுவின் முதல் சீடர் என்று அழைக்கப்படுகிறார். தன் மகனை பறிகொடுத்த பின்னும் திருச்சபையை ஈன்றெடுத்த பெருமை அன்னை மரியாளையே சேரும். மரியாள் இயேசுவை தன் உதிரத்தில் தாங்கும் முன் விசுவாசத்தினால் முதலில் அவரை தன் உள்ளத்தில் பெற்றெடுத்தாள். கானாவூர் திருமணம், கல்வாரி காட்சி இரண்டிலும் மரியா தனிநபராக தோன்றவில்லை. இரண்டிலுமே ஒரு குழுவின் பிரதிநிதியாக இனம் காட்டப்படுகிறார் அக்குழு ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் விசுவாச சமூகமாக அறியப்படுகிறது.

தான் ஈன்றெடுத்த தன் மகன் இயேசு கிறிஸ்து உதிர சிதறல்களால் உருமாறி, சாட்டையினால் சல்லடையாக்கப்பட்டு, அம்மா என்று அழைக்கவும் திறன் இல்லாமல் சிலுவையில் தொங்கிக் கொண்டிருப்பதை கண்ணுரும் அந்த தாயின் மனம் எவ்வளவு துடித்திருக்கும்? ஆனாலும் அப்படிப்பட்ட துன்பமான நேரத்தில் இறைவனின் சித்தத்தை தன் மகன் நிறைவேற்ற சிலுவையில் தொங்குவதைக் கண்டு உறுதியோடு நிற்கிறார. ஏன் இந்த உலகம் மீட்படைய வேண்டும் என்ற ஒரே நேரிய நோக்கோடு. ஆம், நண்பர்களே இந்த தவக்காலத்தில் அன்னை மரியாள் கொண்ட உறுதியோடும் தியாக உள்ளத்தோடும் அவரின் பாதச்சுவடுகளை பின்பற்றி, இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நம் உள்ளத்தில் இருத்தி புது பிறவியாக உரு மாறுவோம்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா 13

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### சிலுவை அடியில் மரியாள்

அன்பர்களே, சில நேரங்களில் விபத்து காலத்தில் உயிரிழந்த சடலங்களில் இருந்து நகைகளை கொள்ளையடித்துச் செல்லும் மனித மிருகங்களை குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படித்தான் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சிலுவையின் உச்சியில் மரண வலியில் வார்த்தைகளால் எழுத முடியாத நிலையில் இயேசு கிறிஸ்து துடித்துக் கொண்டிருந்தார். சிலுவை அடியில் அவரது ஆடையை யார் எடுத்துக் கொள்வது என்பதற்காய் சீட்டு போட்டுக் கொண்டு இருந்தார்கள் படைவீரர்கள். ஆண்டவர் இயேசுவின் வலியைக் குறித்தோ மரணத்தைக் குறித்தோ எந்தவித சலனமும் அவர்கள் மனதில் இல்லை என்று விவிலியத்தில் காணப்படுகிறது. இந்த ஆடையை அவரது தாய் அன்னை மரியாள்தான் நெய்து தந்திருக்க வேண்டும் என்று சில இறையியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். பிள்ளைகள் பொது வாழ்வுக்கு செல்லும் போதும் அந்த வயதை எட்டும் போதும் அவர்களின் அன்னை அவர்களுக்காய் ஒரு ஆடையை செய்து கொடுப்பது அந்த கால யூதர்களின் வழக்கத்தில் இருந்து வந்தது எனவும் குறிப்பிடுகிறார்கள். அப்படி அன்னை அளித்த ஆடையைத்தான் சிலுவை அடியில் அதே அன்னையின் முன்னிலையில் படைவீரர்கள் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர். அந்த ஆடையானது மேலிருந்து கீழ் வரை தைக்கப்படாமல் ஒரே ஆடையாய் இருந்தது என்கிறது விவிலியம். அத்தகைய ஆடையை தலைமை குருக்கள் மட்டுமே அணிவார்கள். இயேசுவின் ஆடை அப்படி இருந்தது என்பது இயேசுவும் ஒரு தலைமை குரு என்பதை குறிப்பால் உணர்த்துகிறது. அவர் தலைமை குருக்களுக்கு எல்லாம் தலைமை குருவானவர். கடவுளுக்கும் மனிதனுக்கும் பாலமாய் இருக்க மனித உருவெடுத்த அந்த கடவுளின் உயிர் பிரியும் நேரத்தில் அன்னை மரியாள் அந்த சிலுவைக்கடியில் நின்றதைக் குறித்து சற்று சிந்திப்போம்.

ஆடைகளை சொந்தமாக்கி கொண்டவர்கள் இயேசுவை இழந்தார்கள். இயேசுவை சொந்தமாக்கிக் கொண்டவர்கள் மகிமை அடைந்தார்கள்.





## அன்னையின் ஒ திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### மலர்களின் மரியன்னை பேராலயம், ப்ளாரென்ஸ்

### சந்தா மரியா தெல் ஃபியோரே

சாந்தா மரியா தெல் ஃபியோரே, ஃப்ளாரென்ஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராலயமாகும். 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் கி.பி. 1296ஆம் ஆண்டு கோதிக் கட்டிடக்கலையில் கட்டிட வல்லுநர் அர்னால்போ தி காம்பியோயின் வடிவமைப்பில் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிட வேலைகள் தொடங்கப்பட்டன. ஏறக்குறை 140 ஆண்டுகள் கட்டிட வேலைகளுக்குப் பிறகு, கி.பி. 1436ஆம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்டது. இப்பேராலயத்தின் அருகில் அமைந்துள்ள, திருமுழுக்கு ஆலயம், ஆலய மணிக்கோபுரம் ஆகிய உள்ளடக்கிய பகுதியானது, யுனஸ்கோ பாரம்பரிய கலைச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஃப்ளாரென்ஸ் நகரில் அமைந்திருந்த இரண்டாவது பேராலயத்தின் மீது இப்புதிய பேராலயம் கட்டப்பட்டுள்ளது. இந்நகரின் முதல் பேராலயமானது கி.பி. 393ல் கட்டப்பட்டு மிலான் நகரைச் சார்ந்த புனித அம்புரோஸ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டது. இப்பேராலயமானது ஃப்ளாரென்ஸ் நகர் புனிதர் லாரன்ஸ் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. கால ஓட்டத்தில் இப்பேராலயம் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமல் போனதால், இரண்டாவது பேராலயம் புனித ரிப்பராத்தாவின் பெயரால் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இப்பேராலயத்தில் இடம் பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், ஆலயத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாகவும், புதிய ஆலயம் கட்ட ஆரம்பித்தனர்.

ஃப்ளாரென்ஸ் மாநகர சபையானது கி.பி. 1296ஆம் ஆண்டு அர்னால்தொ தி காம்பியின் வடிவமைப்பை அங்கீகரித்தது. இவர்தான், இந்நகரில் உள்ள புனித திருச்சிலுவை ஆலயம் முதலிய புகழ்பெற்ற ஆலயங்களின் வடிவமைப்பாளராவார். இந்த ஆலயத்திற்கான, இவரின் வடிவமைப்பானது, மூன்று பக்கவாட்டு பகுதிகளும் எண்கோண வடிவில் உள்ள மையக்கோபுரத்தில் இணையும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆலய மையப்பகுதியானது, பழைய பேராலயமான ரிப்பராத்தை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. ஆலய அடிக்கல்லானது கி.பி. 1296ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் தேதி, திருத்தந்தையின் பிரதிநிதியாக

அந்நகருக்கு வந்த கர்தினால் வலேரியன் அவர்களால் நாட்டப்பட்டது. அன்று தொடங்கிய பணிகள் நிறைவுற 140 ஆண்டுகள் ஆனது என்பது நம்மை வியக்க வைக்கிறது.



பணிகள் ஆரம்பித்த சில ஆண்டுகளில், அதாவது கி.பி. 1302ஆம் ஆண்டு அர்னால்தோ மரணமடைய, ஆலய பணிகள் ஏறக்குறைய 30 ஆண்டுகள் மந்த கதியிலேயே நடைபெற்றன. பின், கி.பி. 1330ஆம் ஆண்டு புனித செனோபியுஸ் அவர்களின் புனிதப்பண்டமானது ரிப்பராத்தா பேராலய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பின் பணிகளில் புதிய உத்வேகம் ஏற்பட்டது. கி.பி. 1331ஆம் ஆண்டு கம்பளி விற்பனையாளர்களின் குழுமமானது, ஆலய பணிகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு, கி.பி. 1334ஆம் ஆண்டு புகழ்பெற்ற கலைஞர் கியோத்தோ அவர்களை ஆலய பணிகளை மேற்கொள்ள நியமித்தது. அந்திரேயா பிசானோ என்கிற கலைஞரின் உதவியோடு, கியோத்தோ அர்னால்தோவின் வடிவமைப்பிலேயே பணிகளைத் தொடர்ந்தார். கியோத்தோ தன் அர்ப்பணிப்பு மிக்க பணியினால் ஆலய மணிக்கோபுரத்தை செவ்வனே முடித்தார். பணிகள் தொடர்ந்து நடந்தாலும் இறைவனின் திட்டம் வேறாக அமைந்திருந்தது. கி.பி. 1337ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாள் கியோத்தோ மரணமடைய, அந்திரேயா பிசானோ பணிகளைத் தொடர்ந்தார். கி.பி. 1348ல் ஐரோப்பாவில் பரவிய பிளாக் டெத் என்றழைக்கப்பட்ட கொள்ளை நோயின் காரணமாக பணிகள் நிறுத்தப்பட்டன.



நோய் காலத்திற்கு பிறகு, கி.பி. 1349ஆம் ஆண்டு, பிரான்செஸ்கோ தலென்தி தலைமையில் பணிகள் தொடங்கப்பட்டன. தலென்தி ஆலய மணிக்கோபுரத்தில் எஞ்சி இருந்த பணிகளையும், ஆலயத்தின் மையப்பகுதியின் இருபுறமும் சிற்றாலயங்களையும் ஏற்படுத்தி ஆலய பகுதிகளை விரிவாக்கினார். அவருக்குப் பின்







யூதித்து பார்வைக்கு அழகானவள், தோற்றத்தில் எழில்மிக்கவள்(யூதித்து 8,7). மேலும் யூதித்து கடவுளுக்கு அஞ்சி நடந்தாள், அவரைப் பற்றி யாரும் தவறாகப் பேசியதில்லை.

நான்காவது எழில் உடையவராக மகா அன்பிற்கு உரியவராக இருந்தவர் எஸ்தர் அரசி. இவள் அழகில் சிறந்த பெண்மணி. இவ்வாறு பழைய ஏற்பாட்டில் ரெபேக்கா, ராகேல், எஸ்தர் மற்றும் யூதித்து போன்றோர் மகா அன்பிற்கு பாத்திரவான்களாக இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் மகா அன்பிற்கு பாத்திரமாக உள்ள மாதாவே என்று அழைக்கப்படுபவர் மரியா மட்டுமே. இங்கே மரியா அழகு நிறைந்தவராக எழில் நிறைந்தவராக மட்டும் இல்லாமல் அருள் நிறைந்தவராக அருள் மிகப் பெற்றவராக(லூக் 1:28) இருக்கிறார். ஆக, நம் தாய் மரி மற்ற எல்லாரையும் விட அன்புள்ளவராக, அன்பு செய்யப்படுபவராக இருக்கின்றார். இதை இலத்தின் மொழியில் Amabilis Super Omness என்று அழைக்கின்றோம். எனவேதான் நாம் அழகோவியமே, எங்கள் அருள் நிறைந்த அன்னை மரியே என்று வாழ்த்திப் பாடுகின்றோம்.

இவ்வாறு நம் அன்னை மரியைப் போற்றி புகழும் நாம் அதே அன்பை பிறரிடம் காட்டுகின்றோமா? விலை உயர்ந்த பொருட்களை அன்னைக்கு கொடுத்துவிட்டு பிற பெண்களையும் தாயையும் எவ்வாறு நடத்துகிறோம்? அம்மா, அன்பின் பாத்திரமே என்று புகழ்ந்து விட்டு மற்ற பெண்களை எந்த கண்களோடு பார்க்கின்றோம்? இன்று பெரும்பாலான வயதான முதியவர்கள் இருப்பது நம் இல்லத்திலா? அல்லது அநாதை இல்லத்திலா? இன்று வீடுகளில், ஆணுக்கு ஒரு சட்டம், பெண்ணுக்கு ஒரு சட்டம் அல்லவா இருக்கிறது?

எனவே மரியன்னைக்கு புகழ்பாடும் நாம் மகா அன்பிற்கு உரிய மாதாவே உம்மைப் போல நாங்களும் இறைப்பற்று உடையர்களாக இறை அருள் பெற்று உமது அன்பை பிறரோடு பகிர்ந்து வாழவும் எங்கள் சமூகத்தில், குடும்பத்தில் பெண்களை அன்பானவர்களாக நடத்தவும், சமமாக நடத்தி, அன்பையே விதைத்து அதை அறுவடை செய்யும் வரம் தாரும் என மன்றாடுவோம்.

அன்பின் மூலதனமாகவும் அனைவரின் அன்பிற்கும் உரியவராகவும் இருப்பதுதான். இந்த வரிசையில் பார்க்கும்போது நம் அன்பு அன்னை தூய மரியாவும், நம் அனைவரின் மகா அன்புக்குரிய தாயாக இருக்கிறார். இதை ஆங்கிலத்தில் MOTHER MOST AMIABLE என்றும் இலத்தின் மொழியில் MATER AMABILIS என்றும் அழைக்கின்றோம். காரணம் அன்னை மரியா பிறரை அன்பு செய்யவும், தாயாக இருக்கின்ற அழகின் அஸ்திவாரமாக இருக்கிற அன்பையும் ஆசீர்வாதங்களையும் தந்து நம் அன்பிற்கு ஆதாரமாக தாயாக இருக்கிறார். தன் அன்பை நம்மில் விதைத்து அந்த அன்பையே அறுவடை செய்யும் தாயாக இருக்கிறார். இதற்கு காரணம் மரியாவின் மாசற்ற இதயம்தான். எனவேதான் புனித பிரான்சிஸ் சலேசியார் இறையன்பு என்னும் தமது நூலை வெளியிடும்போது அதை மரியாவின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்ததாக தன் வாழ்க்கைக் குறிப்பிலே குறிப்பிடுகின்றார். மேலும் புனித மான்.ஃபோர்டு அன்னையின் அன்பைப் பற்றிக் குறிப்பிடும்போது பெரிய பெரிய புனிதர்களை இந்த உலகின் இறுதிவரை உருவாக்கும் மரியன்னையின் அன்பிற்கு பாத்திரமானது என்கிறார்.

விவிலியத்தில் பழைய ஏற்பாட்டின் பின்னணியில், மகா அன்பிற்கு பாத்திரமாக இருப்பவர்கள் எழில்மிகு தோற்றமும், அழகும் உடையவர்களாக இருக்கின்றார்கள். மேலும் மரியன்னை இந்த பழைய ஏற்பாட்டு பெண்ணோடு ஒப்பீடு செய்யப்படுகிறார். முதலாவதாக, மகா அன்பிற்கு பாத்திரமாக அன்னை மரியாவோடு ஒப்பீடு பெறுபவள். ஈசாக்கின் மனைவி ரெபேக்கா ஆவார். ரெபேக்கா ஆபிரகாமின் சகோதரர் நாளேருக்கும், அவர் மனைவி மில்காவிற்கும் பிறந்த பெத்துவேலின் மகள். அவள் எழில்மிக்க தோற்றம் உடையவள். ஆண் தொடர்பு அறியாத கன்னிப் பெண்.(தொநூ 24:15-16)

இரண்டாவதாக, மகா அன்பிற்கு பாத்திரமாக, மரியன்னையோடு ஒப்புமை பெறுபவள் யூதித்து. அவள் மொரியின் மகள் யூதித்தின் கணவர் மனாசே. அவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வாற்கோதுமை அறுவடைக் காலத்தில் மனாசே இறந்து போனார். எனவே யூதித்து கணவனை இழந்த கைம்பெண் ஆனார். அதே சமயத்தில்







பணியேற்ற ஜியோவான்னி லாபோ கினி, கி.பி 1359லிருந்து 1360 வரை பணிகளை மேற்கொண்டார். இவர் ஆலயத்தின் மையப்பகுதியை நான்கு சதுர வடிச பகுதிகளாக பிரித்து, அழகு படுத்தினார். ஆலயத்தின் மூன்று பக்கவாட்டு பகுதிகளும் கி.பி. 1370ஆம் ஆண்டே முடிக்கப்பட்டாலும், ஆலயத்தின் மையப்பகுதியும், கோபுரமும் கி.பி. 1418ஆம் ஆண்டுவரை நிறைவு பெறாமலேயே இருந்தது.

கி.பி 1418ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ஆம் தேதி, ஆலய கோபுர பணிகளை தொடர விரும்பி, அதன் மாதிரிகளுக்கான போட்டி ஒன்று அறிவிக்கப்பட்டது. பல புகழ்பெற்ற கலைஞர்கள் அப்போட்டியில் கலந்து கொண்டு தங்கள் திட்டங்களை அளித்தனர். இறுதியாக, பிலிப்போ புருனேல்ஸ்கியின் வரைபடமும், திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நம் வாசகர்கள், இந்த ஒப்பற்ற கலைஞனை மறந்திருக்க முடியாது. கடந்த வாரங்களில் நாம் கண்ட சாந்த மரிய நொவெல்லா மற்றும் சந்திஸிம்மா அந்நுன்சியாதா பணிகளில் இவரின் கைவண்ணம் இருந்ததை நாம் பார்த்தோம். அக்காலக்கட்டத்தில் ஃப்ளாரென்ஸ் மாநகரில் உருவான கட்டிடங்களில் இவரின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்தது. பல்வேறு சிரமங்களுக்கும், போட்டிகளுக்குமிடையில் கி.பி. 1420ஆம் ஆண்டு ஆலய கோபுர பணிகள் தொடங்கப்பட்டன. வரலாற்றில், எண்கோண வடிவத்தில், பக்கவாட்டு முட்டுகளோ, இடை முட்டுகளோ இல்லாமல் கட்டப்பட்ட மிகப்பெரிய கோபுரமாக இது திகழ்கிறது. கட்டிட கலையின் வினோதமாக இக்கோபுரத்தை புருனேல்ஸ்கி வடிவமைத்தார். இதற்கு முன் உதாரணமாக, உரோமையில் உள்ள பந்தயோன் வடிவத்தை பின்பற்றினார். இத்தகைய பெரிய கோபுரத்தை வடிவமைக்க எந்த சாரமோ, முட்டுகளோ இல்லாமல் கட்டப்பட்டதால் இக்கோபுரம் முழுவதும் சுட்டசெங்கற்களினாலே கட்டப்பட்டுள்ளது. இக்கோபுரத்தின் அளவை பார்க்கும்போது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இக்கோபுரமானது 40 லட்சம் செங்கற்கள் உட்பட மொத்தம் 37,000 டன் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.



இந்த பேராலயத்தின் முகப்பை கட்டிமுடிக்க பல நூற்றாண்டுகள் ஆனது. 15ஆம் நூற்றாண்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட முகப்பானது, பாதியில் நிறுத்தப்பட்டு, கி.பி. 1587ல் முழுவதுமாக தகர்க்கப்பட்டது. பிறகு, பல முயற்சிகள் எடுக்கப்பட்டு கி.பி. 1864ஆம் ஆண்டு எமிலியோ தே ஃபாப்ரிஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்ட மாதிரியில் பணிகள் கி.பி. 1876ல் தொடங்கப்பட்டு கி.பி. 1887ல்



நிறைவுபெற்றது. இந்த நியோ கோதிக் முகப்பானது சிகப்பு, பச்சை மற்றும் வெள்ளை பளிங்கு கற்களின் ஒருங்கிணைந்த கட்டிட கலையின் எடுத்துக்காட்டாக திகழ்கிறது. இந்த முகப்பானது, கிறிஸ்துவின் தாய் அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இப்பேராலயம் மிகப் பெரியதாக அமைந்தது. இதன் மொத்த கட்டிட அளவு 8300 சதுர மீட்டராகும் (89,340 சதுர அடி). இதன் நீளம் 153 மீட்டர் (502 அடி), அகலம் 38 மீட்டர் (125 அடி), சிலுவை வடிவின் கை பகுதியில் அகலம் 90 மீட்டர் (300 அடி) ஆகும். ஆலய பக்கவாட்டு வளைவுகளின் உயரம் 23 மீட்டராகவும் (75 அடி) இருந்தது. ஆலய கோபுரம் 114.5 மீட்டராக (375 அடி) அமைந்திருந்தது. அன்றைய கிறிஸ்தவ உலகின் மிகப் பிரம்மாண்டமான ஆலயமாக திகழ்ந்தது. இன்றளவும் உலகில் உள்ள ஆலய கோபுரங்களில் உயரமான கோபுரங்களில் ஒன்றாக இக்கோபுரம் திகழ்கிறது.

ஆலய முகப்பில் மூன்று பிரம்மாண்டமான பித்தளை கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை, கி.பி 1899 - கி.பி. 1903 காலகட்டங்களில் நிறுவப்பட்டன. இக்கதவுகளில் அன்னை மரியாவின் வாழ்வு முழுவதும் பொறிக்கப்பட்டுள்ளன. கதவுகளுக்கு மேல் உள்ள பகுதியில் அன்னை மரியா கிறிஸ்து அரசருடன் இருக்கும் ஓவியமும், புனித திருமுழுக்கு யோவான் ஓவியமும் அற்புதமான வகையில் வரையப்பட்டுள்ளன. மையக் கதவின் மேல் அன்னை மரியாள் அரியணையில் மலர்களால் ஆன செங்கோலை கையில் தாங்கி அமர்ந்திருப்பது வரையப்பட்டுள்ளது. இந்த முகப்பு ஓவியத்திலிருந்துதான் இந்த ஆலயம் மலர்களின் மரியன்னை பேராலயம் என்ற பெயர் பெற்றது.



ஆலயத்தின் கதவுகளுக்கு மேல் நான்கு நற்செய்தியாளர்களை



ஆகட்டும்





# மாதா மன்றாட்டு மாலை

5

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



## 5. மகா அன்பிற்கு பாத்திரமான மாதாவே

அன்பு உள்ள இடத்தில் மலைச் சுமையும் மலர் மாலைச் சுமையாகும். அன்பு இல்லா இடத்தில் மலர் மாலைச் சுமையும் மலைச் சுமையாகும்.

இந்த உலகில் அன்பைப் பற்றி பேசாத கவிஞர்கள் இல்லை, மதங்கள் இல்லை. அன்பை தங்கள் வாழ்வில் ஒரு நொடியாவது அனுபவிக்காமல் இருப்பவர்கள் இல்லை. ஏனென்றால் அன்பே மனிதனின் உயிர்நிலையாக இருக்கிறது. இந்த அன்பிலே மிகவும் உயர்ந்த நிலையில் உயிர்த்துடிப்பாக இருப்பது தாயன்பு. எனவேதான் நம் மொழியை தாய் மொழி என்றும் நிலத்தை பூமித்தாய் என்றும் கலையை கலைமகள் என்றும் தாயோடு ஒப்பிட்டு தாய்மையைப் போற்றுகின்றோம்.

நம் தமிழ் இலக்கியத்தில் போற்றித் தாய் என்று பொற்குழல் ஊதடா போற்றித் தாய் என்று தாளங்கள் கொட்டடா என்று குழல் ஊதி தாங்கள் கொட்டி தாயின் மேல் இருக்கும் அன்பைப் பெருமையுடன் தரணிக்கு எடுத்துரைக்கிறார் பாரதி.

உலகெல்லாம் உதிப்பிடம் தாய்மை
உதித்து தங்கி ஒழுகுமிடம் தாய்மை
கலையின் மூலம் கமழுமிடம் தாய்மை
கடவுளன்பு சுரக்குமிடம் தாய்மை

என்று தாயன்புக்கும் தாய்மைக்கும் மணிமகுடம் சூட்டியுள்ள தமிழ்த் தாயின் தவப்புதல்வன் திரு.வி.க.

இவ்வாறு பல்வேறு வகையில் தாயையும் தாயன்பையும் போற்றி புகழ்வதற்குக் காரணம் தாய்மை அழகின் பிறப்பிடமாகவும், தாய்

ஆகட்டும்



# வணக்கத்துக்குரிய அந்திரேயா செக்கின் OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இவ்வுலகில் மனிதர்கள் புனிதர்களாக இருப்பதற்கு, கடவுள் அன்பு செய்வது போல சக மனிதர்களை அன்பு செய்தால் மட்டும் போதும். இந்த விருதுவாக்கோடு வாழ்ந்து இன்று வணக்கத்துக்குரியவராக இருப்பவர்தான், நம்முடைய மரியின் ஊழியர் தந்தை அந்திரேயா செக்கின். தந்தை அந்திரேயா 1914 ஆம் ஆண்டு திரேவிசொ (இத்தாலி) என்கிற ஒரு ஊரில் பிறந்தார். 1927 ஆம் ஆண்டு மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். தன்னுடைய துறவற மற்றும் இறையியல் பயிற்சியை முடித்தபின், 1938 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தன்னுடைய இறையியல் படிப்பின் போது, அவர் வெளிப்படுத்திய ஆர்வத்தினாலும், திறமையினாலும், அவரை முனைவர் படிப்பிற்கு, தரம் மிகுந்த பெல்ஜிய நாட்டு கல்லூரிக்கு அவரை அனுப்பி வைத்தனர். 1942 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்று ரோமை நகருக்கு திரும்பினார். ரோமை நகரில் உள்ள நமது மரியானும் கல்லூரியில் மூன்று முக்கியமான இறையியல் பாடங்களை கற்பித்து வந்தார். இவருடைய கனிவான குணத்தைக் கண்டு இவரை இளம் துறவிகளுக்கு வழிகாட்டியாகவும் நியமித்தார்கள். அதன்பின், தன்னுடைய மறைமாநிலத்தில், துணை அதிபர் தந்தையாகவும், பின்னர், அதிபர் தந்தையாகவும் பல்வேறு ஆண்டுகள் பணிசெய்தார். இந்த இறைப்பணி காலத்தில், பல்வேறு ஆவணங்கள் எழுதுவதற்கும், பல்வேறு புது முயற்சிகள் எடுப்பதற்கும், காரணமாக இருந்துள்ளார். தனது இறுதி ஆண்டுகளில், நமது மோந்தே பெரிகோ நகரின் ஆலயத்தில், ஆன்மீக பணியாளராக செயலாற்றினார். 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவரை புனிதராக கருத, இவர் அப்படி என்ன சிறப்பாக செய்துவிட்டார், என்று நம்மில் பலருக்கும் ஒரு கேள்வி எழலாம். இவருடைய வாழ்வை கண்டவர்கள் இவரை பற்றி கூறுகையில், தந்தை அந்திரேயா தனது கிறிஸ்தவ அழைப்பை முழுமையாக உணர்ந்தவர். எனவேதான், நல்லிணக்கம் மற்றும் அமைதிக்காக, தனது வாழ்நாட்களை (ஆசிரியர் பணியிலிருந்து ஆன்மீக பணிவரை), தொண்டு, உண்மை, என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் அவர் தனது சகோதரர்களுக்கு பணிவான சேவை செய்துவந்தார். மற்றும் அவருடைய குணம் எப்போதும், அர்ப்பணிப்போடு சேர்ந்த மென்மை மற்றும் இரக்கம், தேவைப்படுபவர்களிடம் தாராள மனப்பான்மை, நிலையான இறைத்தேடல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. இவ்வாறு ஒவ்வொருவரின் வாழ்விலும், ஒளிமயமான அழியாத சாட்சியத்தை எப்போதும் விட்டுச் சென்றுள்ளார். எனவேதான், இவரை புனிதராக்க நமது மரியின் ஊழியர் சபை 2001 ஆம் ஆண்டு பணிகளை தொடங்கியது.







மையப்படுத்தி அழகுற வரையப்பட்ட பிரம்மாண்டமான கடிகாரம் ஒன்று உள்ளது. இக்கடிகாரத்தில் ஒற்றை முள் மட்டுமே உள்ளது. இக்கடிகாரமானது கி.பி. 1443ல் பவுலோ உச்சல்லோவால் நிறுவப்பட்டது. இது, இன்றளவும் பழுதில்லாமல் பயன்பாட்டில் உள்ளது.

கடிகாரத்திற்கு மேல் உள்ள வட்டவடிவ கண்ணாடி ஜன்னலில் அன்னை மரியாவிற்கு ஆண்டவர் இயேசு மணிமுடிசூட்டும் நிகழ்வானது தத்ரூபமாக வரையப்பட்டுள்ளது. இந்த அற்புதமான ஓவியமானது 14ஆம் நூற்றாண்டில் காத்தோ காத்தி என்பவரால் வரையப்பட்டதாகும். ஆலய கோபுரத்தில் உள்ள கண்ணாடி ஜன்னலில் தொனதெல்லோ என்ற புகழ் பெற்ற ஓவியர் அன்னையின் மணிமுடிசூட்டும் நிகழ்வை வரைந்துள்ளார். ஆலயத்தின் கீழ் இருந்து பார்த்தால் தெரியக்கூடிய ஒரே ஓவியமாக இது திகழ்கிறது.

ஆலய கோபுரத்தின் உட்புறத்தில் இறுதி தீர்வை நிகழ்வு வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தின் அளவே நம்மை பிரமிக்க வைக்கிறது. இந்த ஓவியம் 3600 சதுர மீட்டர் (38750 சதுர அடி) அளவில் வரையப்பட்டுள்ளது. இதன் பணிகளானது கி.பி. 1572ல் தொடங்கப்பட்டு கி.பி. 1579ல் நிறைவுபெற்றது. இவ்வளவு பெரிய ஓவியத்தை ஒருவர் மட்டும் வரைந்திருக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். பல ஓவியர்களின் கைவண்ணங்களை, வித்தியாசமான படைப்புகளை நாம் இந்த ஓவியத்தில் காணலாம். இந்த ஓவியங்கள் பெதரிகோ சுக்காரி, பர்தலேமேயு கர்த்துாச்சி, தோமேனிகோ பசிஞானோ மற்றும் ஸ்தேபனோ பியரி போன்ற தலைசிறந்த ஓவியர்கள் வரைந்துள்ளனர். அவற்றில், கடவுளை துதித்துப்பாடும் வானவர்களின் குழு, ஆண்டவர் இயேசு, ஆண்டவரின் தாய் மரியாள், புனிதர்கள், துாயஆவியாரின் கனிகளும், கொடைகளும் தலையாய பாவங்கள், மற்றும் நரகம் முதலியவை தத்ரூபமாக நம் கண்முன் கொண்டுவரப்பட்டுள்ளன.



திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# எண்ணிக்கை 19-26



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 1 |
| | 6 | | | | | | | 5 | |
| | | 10 | | | | | 9 | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | 14 | | | | | |
| | | | 13 | | | | | | |
| | | 11 | | | | | 12 | | |
| | 7 | | | | | | | 8 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1)………….. இஸ்ரயேல் மக்களுக்கு மீட்பின் ஆண்டு வரும்போது அவர்கள் உரிமைச் சொத்து அவர்களுக்குரிய குலத்தின் உரிமைச் சொத்துடன் சேர்க்கப்படும்

4) அவர்கள் மோசேயிடம், 'உமது அடியார்களாகிய நாங்கள் எங்கள் அதிகாரத்திற்குட்பட்ட போர்வீரரை …………….. ஒருவரும் குறையவில்லை

5) தன் கணவன் அதைக் கேட்டு அவன் அதைக் கேட்ட நாளில் ……….. ஒன்றும் சொல்லாதிருந்தால், அவள் செய்துகொண்ட பொருத்தனைகள் நிலைக்கும்: அவள் எடுத்துக் கொண்ட உறுதிமொழிகளும் நிலைக்கும்.

8) யாக்கோபின் தூசியை எண்ணிக்கையிடவோ இஸ்ரயேலின் கால் பங்கைக் கணக்கெடுக்கவோ யாரால் ………..

9) உடனே ………… கொள்ளி வாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார்: அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர்.

12) ஆனால் நீங்கள் இதைச் செய்யாவிட்டால் நீங்கள் ஆண்டவருக்கெதிராகப்……….. செய்திருக்கிறீர்கள்: உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிப்பது திண்ணம்.

**இடமிருந்து வலம்**

2) சிமியோன் மக்களின் குலத்திலிருந்து …………… மகன் செமுவேல்.

3) அத்துடன் ஆண்டவரின் சினம் இஸ்ரயேலுக்கு எதிராக மூண்டது: அவர் இப்பாலை நிலத்தில் நாற்பது ஆண்டுகள் அவர்களை அலையச் செய்தார்: ஆண்டவர் பார்வையில் தீயன செய்த தலைமுறை அனைத்தும் அழியுமட்டும் இது…………

6) அவனுக்கு …………. இல்லையெனில் அவன் உரிமைச் சொத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும்.





வெளிப்பாடாக நம் ஒவ்வொருவரையும் தேடி வந்து. மன்னித்து தம் அருளையும், ஆசீரையும் நிறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக, பாவசங்கீர்த்தனம் என்னும் அருட்சாதனத்தின் வழியாக நம் ஒவ்வொருவரையும் தேடி வந்து தம் இரக்கத்தைப் பொழிந்துகொண்டிருக்கிறார். இறை இரக்கத்தைப் பெறுகின்ற நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுபவர்களாக வாழவேண்டும். கடவுள் நம் பாவங்களை மன்னிப்பது போல் நாமும் நமக்கெதிராக மற்றவர்கள் செய்கின்ற குற்றங்களை மன்னித்து வாழ வேண்டும். உங்கள் தந்தையாகிய இறைவன் இரக்கமிக்கவராக இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாக வாழுங்கள் என்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கேற்ப நாமும் இரக்கமுள்ள இறைமக்களாக வாழ முயற்சி செய்வோம். அதற்கான வரம் வேண்டி இன்றைய நாளில் சிறப்பாக இறைவனிடத்தில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

உயிர்த்த கிறிஸ்து மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அன்பு, இரக்கம் மற்றும் பகிர்வு என்னும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்து தம் சீடர்களின் நலனுக்காக தம்முடைய வாழ்வையே முழுமையாகப் பகிர்ந்து கொண்டார். அதேபோல கிறிஸ்தவர்கள் மற்றவரின் நலனுக்காக தங்களிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தொடக்க கால திருஅவையில் வாழ்ந்த அனைத்து நம்பிக்கையாளரும் தங்களிடம் இருந்த எல்லாவற்றையும் பொதுவில் வைத்து மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டார்கள். அதனால்தான் அவர்கள் மத்தியில் ஏழைகளே இல்லை. இத்தகைய வாழ்க்கைமுறையை விளக்கும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இயேசுவை இறைமகன் என்று நம்புவோர் அனைவரும் இறைவனுடைய கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக, பிறரன்பில் வளர்ந்து எல்லாரையும் அன்பு செய்ய வேண்டும். இறைமக்கள் தாங்கள் ஒருவர் மற்றவரை அன்பு செய்து ஒற்றுமையோடு வாழும்பொழுதுதான் உலகத்திலுள்ள பகைமை, வெறுப்பு, பொறாமை என்னும் தீமைகளை வெல்ல முடியும் எனக் கூறும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு பக்தியோடு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் அன்புப் பணியின் வழியாக உம்முடைய இரக்கத்தை இவ்வுலக மக்களுக்கு பிரதிபலிக்கின்ற கருவிகளாக வாழ வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, கிறிதுவில் நம்பிக்கை கொண்டுள்ள நாங்கள் அனைவரும் ஒருவர் மற்றவர் மீது இரக்கம் கொண்டு, மற்றவர்கள் எங்களுக்கு எதிராக இழைக்கும் தீமைகளையும், குற்றங்களையும் மன்னித்து வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கத்தின் இனிய இறைவா, நாங்கள் அனைவரும் தொடக்கத் திருஅவையில் வாழ்ந்த நம்பிக்கையாளர்களைப் போல எங்களிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து, ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து இரக்கத்தின் மக்களாக வாழ வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. பரிவின் இறைவா, திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் கலங்கித் தவிக்கும் அனைத்து தம்பதியர் மீதும் இரக்கமும், பரிவும் கொண்டு அவர்களுக்கு விரைவிலேயே குழந்தை செல்வத்தைக் கொடுத்து அவர்கள் குடும்பங்களை மகிழ்ச்சியால் நிரப்ப வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

புதிய வாழ்வைப் பெற்றுள்ள நாம் அவருக்கு பிடித்த விதத்தில் நம்முடைய வாழ்க்கையை வாழ தேவையான அருள் வேண்டி இன்றைய நாளில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு கிறிஸ்து செய்த அனைத்து செயல்களுக்கும், போதித்த அனைத்து போதனைகளுக்கும் நாங்கள் எந்நாளும் சாட்சிகளாக இருப்போம். அவர் இறந்தார், மூன்றாம் நாள் உயிர்த்தார் என்னும் நற்செய்தியை பறைசாற்றவும் சான்று பகரவும் அவர் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார் என வீரஉரையாற்றும் தூய பேதுருவின் சாட்சிய பகிர்விற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

உயிர்த்த கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொள்வோர் மண்ணுலகைச் சார்ந்த காரியங்களில் ஈடுபடாமல் விண்ணுலகம் சார்ந்த காரியங்களில் மட்டும்தான் ஈடுபடவேண்டும். கிறிஸ்தவர்களுடைய எண்ணங்களும், சிந்தனையும், செயலும் விண்ணகம் சார்ந்தே இருக்க வேண்டும் என எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. இறைவா, நீர் இவ்வுலகில உருவாக்கிய திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உம்முடைய உயிர்ப்புக்கு உண்மை சாட்சிகளாக வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்களுக்காக உயிர்த்த இறைவா, துன்பத்தின் வழியாகத்தான் வெற்றி உண்டு என்பதை உணர்ந்து நாங்கள் எங்கள் வாழ்வில் வருகின்ற எல்லா துன்பங்களையும் மனமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு கொண்டு வந்த அன்பு, அமைதி, மகிழ்ச்சி என்னும் கொடைகள் எங்களுடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் எந்நாளும் தங்கியிருக்க வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. எல்லாம் வல்ல இறைவா, எங்களுக்கு புதிய வாழ்வைக் கொடுப்பதற்காக நீர் உயிர்த்தீர் என்பதை நம்பும் நாங்கள் எங்களுடைய பாவம் நிறைந்த பழைய வாழ்வை விட்டுவிட்டு உயிர்ப்பின் மக்களாக புனிதமான புதிய வாழ்க்கை வாழத் தேவையான வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## உயிர்ப்புக் காலம் இரண்டாம் ஞாயிறு
## (இறை இரக்கத்தின் ஞாயிறு) 07-04-2024
### (திப 4:32-35; 1யோவா 5:1-6; யோவா 20:19-31)

**திருப்பலி முன்னுரை**

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, உயிர்ப்புக்காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையை நம் திருஅவையானது இறை இரக்கத்தின் ஞாயிறாகச் சிறப்பிக்கின்றது. இறை இரக்கம் என்பது நம்மைத் தேடி வருவது, நம் பலவீனங்களை பலப்படுத்துவது, நம்முடைய பாவங்களை மன்னிப்பது. மனிதன் தன்னுடைய சுயநலத்தினாலும், ஆணவத்தினாலும், மனித பலவீனத்தினாலும் கடவுளுக்கு விரோதமாக வாழ்கின்றபோதும் கடவுள் அவனைத் தேடிச்சென்று, மன்னித்து, அரவணைத்துக் கொள்ளுகின்ற பண்புதான் இறை இரக்கம். வி ப 34:6-7 ல் இரக்கமும் பரிவும் உள்ளவர் இறைவன், சினங்கொள்ள தாமதிப்பவர்: பேரன்புமிக்கவர்: நம்பிக்கைக்குரியவர், ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பையும், பேரிரக்கத்தையும் காட்டுபவர் என்று வாசிக்கிறோம். நம்முடைய கடவுள் பழிவாங்குகின்ற கடவுள் அல்ல. அழிக்கின்ற கடவுள் அல்ல. மாறாக, இரக்கம் காட்டி, மனிதர்களை மனம் திருப்பி, புதிய வாழ்வு வாழச் செய்கின்ற கடவுள் என்பதை இன்றைய திருவிழா நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. இறைவன் தம் இரக்கத்தின்





7) இஸ்ரயேலுக்கு ஆசி கூறுவதே ஆண்டவருக்கு ………… என்று பிலயாம் கண்போது, முன்பு செய்தது போன்று அவர் சகுனம் பார்க்கச் செல்லாமல், தம் முகத்தைப் பாலைநிலத்துக்கு நேரே திருப்பினார்.
11) மேலும் மரண தண்டனைக்குரிய கொலைக்காரன் ஒருவனின் உயிருக்காக ஈட்டுத்தொகை
………… நீங்கள் வாங்க வேண்டாம்: அவன் கொல்லப்படத்தான் வேண்டும்.
13) இவை தவிர மாதந்தோறும் அளிக்கும் எரிபலி, அதற்குரிய உணவுப் படையல், ………… செலுத்தும் எரிபலி, அதற்குரிய நீர்மப் படையல் ஆகியவை அவர்கள் முறைமையின்படி ஆண்டவருக்கு உகந்த நறுமணமான நெருப்புப் பலியாக அமையும்.
14) காத்துப் புதல்வரும், ரூபன் புதல்வரும் மறுமொழியாக,' ஆண்டவர் உம் அடியார்களுக்குச் சொன்னபடியே நாங்கள் செய்வோம்: எண். 32:32 நாங்கள் ஆண்டவர் முன்னிலையில் போர்க் கலந்தாங்கிக் கானான் நாட்டுக்குள் தொடர்ந்து செல்வோம்: எங்கள் உரிமைச் சொத்தான உடைமை யோர்தானுக்கு ………… எங்களுடனேயே இருக்கும்' என்றனர்.

**மேலிருந்து கீழ்**

1) யோர்தானுக்கு ………… மூன்று நகர்களும், கானான் நாட்டுக்குள் மூன்று நகர்களும், நீங்கள் அடைக்கல நகர்களாகக் கொடுக்க வேண்டும்.
2) பின்பு அவர்கள் செபேர் மலையிலிருந்து புறப்பட்டு, ………… பாளையம் இறங்கினர்.
5) …………, உணவுப் படையலாக இருபதுபடி மரக்காலில் பத்தில் ஒரு அளவு மிருதுவான மாவை அடித்துப் பிழியப்பட்ட கால் கலயம் எண்ணெயுடன் பிசைய வேண்டும்.
6) ஆக, இஸ்ரயேலின் ஆண் ………… தொகை ஆறு லட்சத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பது.
9) அவர்கள் தொப்காவிலிருந்து பயணமாகி ………… பாளையம் இறங்கினர்.
10) ஆண்டவர் மோசேயிடம், எண்.' கோலை எடுத்துக் கொள்:……… உன் சகோதரன் ஆரோனும் மக்கள் கூட்டமைப்பைக் கூடிவரச் செய்யுங்கள்: அவர்கள் பார்வையில் பாறைத் தண்ணீரைத் தரும்படி அதனிடம் பேசுங்கள்:

**கீழிருந்து மேல்**

3) எங்கள் பிள்ளைகளும், மனைவியரும், எங்கள் மந்தைகள், கால்நடைகள் அனைத்தோடும் கிலயாதின் ………… தங்கியிருப்பர்:
4) நியமிக்கப்பட்ட திருநாள்களில் நீங்கள் ஆண்டவருக்குப் படைக்க வேண்டியவை இவையே. உங்கள் பொருத்தனைகள், தன்னார்வப் படையல்கள், ………… உணவுப் படையல்கள், நீர்மப் படையல்கள், நல்லுறவுப் பலிகள் ஆகியவை நீங்கலாகச் செய்ய வேண்டியவை இவையே.
7) மோசே இஸ்ரயேலின் தலைவர்களிடம்,' உங்கள் ஒவ்வொருவரும் பாகால் பெகோரை அடிபணிந்த தம் ஆள்களைக் கொன்று ………… என்றார்.
8) அவர் அவர்களிடம், ………… இரவில் இங்குத் தங்கியிருங்கள்: ஆண்டவர் என்னோடு பேசுகிறபடி நான் உங்களுக்கு வார்த்தை தருவேன்' என்றார்.
11) மனிதப் பிணத்தைத் தொடுபவன் ………… ஏழு நாள்களுக்குத் தீட்டுப்பட்டிருப்பான்.
13) பின்பு அவர்கள் சிறைப்பிடித்தோர், கொள்ளையடித்தவை, சூறையாடியவை ஆகியவற்றை எரிகோவுக்கு எதிரே யோர்தானையடுத்த மோவாபுச் சமவெளியில் பாளையத்திலிருந்த மோசே, குரு ………… இஸ்ரயேல் கூட்டமைப்பினர் ஆகியோரிடம் கொண்டு சென்றனர்
14) நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறு: மகன் இல்லாமலே ஒருவன் இறந்து விட்டால்……….. உரிமைச் சொத்து அவன் மகளுக்குச் சேர வேண்டும்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-03-2024**

# ஆயிரம் துன்பம் சுமந்தவள் ⑪

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



ஆயிரம் துன்பம் சுமந்தவள் - நமக்கு
ஆறுதல் வழங்கிட வந்தவள்
அளவில்லா வாதைகள் கண்டவள் - ஆயினும்
ஆண்டவர் வார்த்தையில் நின்றவள்
கல்பல தூரம் நடந்தவள் - நிறைமாதக்
கற்பிணி என்றாலும் புரிந்தவள்
எகிப்துக்கு மீண்டும் விரைந்தவள் - கைக்
குழந்தையோடு என்றாலும் முனைந்தவள்
சிமியோனின் முன்செய்தி ஏற்றவள் - அதனை
சீர்மையாய் நுண்மதி சேர்த்தவள்
காணாமல் பிள்ளையைத் தொலைத்தவள் - கோவிலில்
கண்டதும் தன்னையே மலைத்தவள்
பிலாத்துவின் தீர்ப்பினைப் பார்த்தவள் - யூத
மக்களின் தீர்வையால் வேர்த்தவள்
சிலுவை சுமந்ததால் நொந்தவள்- மகன்
சிந்திய இரத்தத்தால் வெந்தவள்
கல்வாரி மலைவரை சென்றவள் - மகனோடு
கடைசி வரைக்குமே நின்றவள்
முள்முடி கசையடி பார்த்தவள் - மண்ணில்
மயங்கி சரிந்ததால் நீர்த்தவள்
ஆடைகள் களைந்ததால் துடித்தவள் - கூரிய
ஆணியால் அறைந்ததால் வெடித்தவள்
உயிரைக் கொடுத்ததால் மடிந்தவள் - மகனின்
உடலை மடியோடு சரிந்தவள்





**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல இறைவா, புனித திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் இப்புனித வாரத்தில் உம்முடைய திருமகனின் பாடுகளைத் தியானித்து திருஅவையிலுள்ள அனைத்து சவால்கள், துன்பங்கள் எல்லாவற்றையும் இயேசுவின் துன்பத்தோடு ஒப்புக்கொடுத்து ஜெபிக்க அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்களுக்காக துன்பப்படும் இறைவா, நாங்கள் எங்கள் துன்ப நேரங்களில் நம்பிக்கையில் தளர்ச்சியடையாமல் இருக்கவும், அந்த துன்பத்தின் வழியாக மகிழ்ச்சி பிறக்கும் என்ற எதிர்பார்ப்போடு வாழவும் எங்களுக்கு வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, இந்த புனித வாரத்தில் உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் உலக ஆசாபாசங்களில் ஈடுபடாமல் பல பக்தி முயற்சிகளைச் செய்து உம்மை நெருங்கிவரவும், உமக்கு உகந்த வாழ்க்கை வாழவும் வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.
4. ஆற்றலின் இறைவா, நற்செய்திக்காகவும், நீதியின்பொருட்டும் துன்பப்படும் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் அனுபவிக்கின்ற சவால்கள், துன்பங்கள், அவமானங்கள் எல்லாவற்றையும் பொறுமையோடு தாங்கிக்கொண்டு தொடர்ந்து நற்காரியங்களில் ஈடுபடும் ஆற்றலையும் மனப்பக்குவத்தையும் அவர்களுக்குத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

## உயிர்ப்பு ஞாயிறு (31-03-2024)

**திப 10:34,37-43; கொலோ 3:1-4; யோவா 20:1-9**

**திருப்பலி முன்னுரை**

உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள். கல்லறையில அடக்கம் செய்யப்பட்ட ஆண்டவர் நமக்கு புதிய வாழ்வைக் கொடுப்பதற்காக இன்று கல்லறையைப் பிளந்துகொண்டு உயிர்த்தெழுந்துள்ளார். நம்முடைய கத்தோலிக்க திரு அவையின் நம்பிக்கைக்கு அடித்தளமாக இருப்பது ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு. ஆண்டவர் உயிர்க்கவில்லை என்றால் இன்று திரு அவை இல்லை, தேவாலயங்கள் இல்லை, கத்தோலிக்க நம்பிக்கை இல்லை, திருவருட்சாதனங்கள் இல்லை. அவருடைய உயிர்ப்பினால் நாம் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றோம்: வாழ்வைப் பெற்றிருக்கின்றோம். நமக்காக பாடுகள் பல அனுபவித்து, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்து, அந்த உயிர்ப்பின் வழியாக புதிய வாழ்வைக் கொடுத்திருக்கின்ற கிறிஸ்துவுக்காக நாம் என்ன செய்யப் போகின்றோம்? நம்முடைய பதில் என்னவாக இருக்கப்போகின்றது? வார்த்தையில் பதில் சொல்லாமல் நம்முடைய வாழ்க்கையின் வழியாக நாம் பதில் சொல்ல வேண்டும். தவக்காலத்தில் பல தவறான பழக்க வழக்கங்களையும், தீமையான காரியங்களையும் தவிர்த்த நாம் தொடர்ந்து நம்முடைய வாழ்க்கையில் தீமையை விலக்கி நல்ல மனிதர்களாக, ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், நம்பிக்கை நிறைந்தவர்களாகவும் வாழ்வதே நாம் இயேசுவுக்கு செய்கின்ற நன்றிக் காணிக்கையாக இருக்கும். எனவே, ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பினால்

மனஉறுதியுடன் செபிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் உமது வார்த்தையை வாசித்து, தியானித்து அதை எங்களது வாழ்வாக்கி உமது இரக்கத்திற்கும், மீட்புக்கும் உரிய மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**குருத்து ஞாயிறு (24-03-2024)**

**எசா 50:4-7; பிலி 2:6-11; மாற் 14:1-15:47**

### திருப்பலி முன்னுரை

கடந்த நாற்பது நாட்களாக நம்முடைய பாவங்களுக்காக மனம் வருந்திய நாம், கடவுளுக்கு எதிராகவும், மனிதருக்கு எதிராகவும் நாம் செய்த குற்றங்களை நினைத்து மனம்வருந்தி மன்றாடிய நாம் இன்று புனித வாரத்தை ஆரம்பிக்கின்றோம். இன்றைய நாளானது குருத்து ஞாயிறு எனவும், பாடுகளின் ஞாயிறு எனவும் அழைக்கப்படுகின்றது. குருத்து ஞாயிறு என்பது இறைவனின் மகிமையையும், பாடுகளின் ஞாயிறு என்பது இறைவனின் துன்பத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. விவிலியத்தின் அடிப்படையில் குருத்தோலை என்பது வெற்றியின் அடையாளமாகவும், மாட்சியின் அடையாளமகவும், மகிழ்ச்சியின் அடையாளமாகவும் இருக்கின்றது. ஆண்டவர் இயேசு தம்முடைய பாடுகளுக்கு முன்பாக எருசலேம் நகரத்திற்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு, மக்கள் புடைசூழ பவனி வந்ததை நாம் இன்று நினைவு கூறுகின்றோம். இயேசு இப்படியாக எருசலேமிற்குள் செல்வது அரசாட்சி செய்வதற்காக அல்ல மாறாக, இறப்பதற்காக. தம்முடைய நண்பனால் காட்டிக் கொடுக்கப்படவும், மறுதலிக்கப்படவும், தீர்ப்பிடப்படவும், சிலுவையைச் சுமந்து ஆணிகளால் குத்தி தொங்கவிடப்படவும் ஆண்டவர் இயேசு மகிழ்ச்சியோடு எருசலேமுக்குச் செல்கின்றார். இந்த மறையுண்மைகள் அனைத்தையும் இந்த புனித வாரத்தில் நாம் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். எனவே, இந்த புனித வாரம் முழுவதுமாக நாம் நமக்காக பாடுபட இருக்கின்ற நம் அன்பு இயேசுவோடு அதிக நேரம் செலவழிப்போம். செபத்திலும், தவத்திலும் அதிக நேரம் செலவழித்து இறை ஆசீரையும் அருளையும் பெற முயற்சி செய்வோம்.

### முதல் வாசக முன்னுரை

நீதிக்காகவும், நேர்மைக்காகவும் குரல் கொடுப்பவன், போராடுபவன் அடிக்கப்படுகின்றான், ஒடுக்கப்படுகின்றான், காறி உமிழப்படுகின்றான். ஆனால் அவன் ஒருபோதும் அவமானம் அடைவதில்லை. காரணம் கடவுள் அவனுக்கு என்றும் துணை நிற்கிறார். ஆண்டவரின் ஊழியர்களுக்கு துன்பம் நிச்சயமாக வரும். ஆனால் இறைவனின் துணையோடு அவர்கள் வெற்றி பெறுவார்கள் எனக் கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவர் இயேசு இறைமகனாக இருந்தாலும் அவர் தமக்குரிய இறை இயல்பைத் துறந்து அவமானத்தின் அடையாளமான சிலுவைச் சாவை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு தம்மையே தாழ்த்தி கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார். அதனால் கடவுளும் அவரை விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசராக உயர்த்தினார். அவர் வழியாகவே கடவுள் என்றும் மாட்சிபடுத்தப்படுவார் என பறைசாற்றும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**தவக்காலம் 4-ம் ஞாயிறு (10.03.2024)**

2குறி 36: 14-16,19-23 எபே 2:4-10 யோவா 3:14-21

### முன்னுரை

விடுதலை உணர்வு ஒவ்வொரு மனிதனின் உயிர்மூச்சோடும் கலந்தது. இருளில் வாழ்வோர் விடியலையும், சிறையில் தவிப்போர் விடுதலையையும் தேடுவது தவிர்க்க முடியாதது. அடிமைத்தனத்தை யாரும் அன்பு செய்வதில்லை. கூண்டிலடைக்கப்பட்ட அரசனாக இருப்பதைவிட சுதந்திரப் பறவையாக இருப்பது மேலானது என்கிறது டேனிஷ் பழமொழி. அமைதியான அடிமைத்தனத்தைவிட ஆபத்தான சுதந்திரம் மேலானது என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. இதை நன்கு உணர்ந்த இயேசு தனது பணிவாழ்வின் நோக்கமாக பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு தான் அளிக்க இருக்கும் விடுதலையைப் பற்றி லூக்கா 18:19 –ல் தெளிவுபடுத்துகிறார்.

இன்றைய இறைவார்த்தை வழிபாடும் இறைவன் தம் மக்களுக்கு தருகின்ற இருவிதமான விடுதலையை சுட்டிக்காட்டுகின்றன. அரசியல் மற்றும் ஆன்மீக வாழ்வில் நம் ஒவ்வொருவருக்குமே விடுதலையும், வாழ்வும், நம்பிக்கையும் தருகின்ற இறைவனாக தன்னை வெளிப்படுத்துகின்றார். அடிமைத்தனங்களை அறவே விரும்பாதவர் நம் இறைவன் என்பதை உணரும் நாம் நம்முடைய வாழ்வில் நிலவும் பாவ அடிமைத்தனத்தையும் சமூகத்தில் நிலவும் அரசியல் அடிமைத்தனத்தையும் அகற்றி விடுதலையின் மக்களாக வாழ்ந்து உயிர்ப்பின் மக்களாக வாழ முயல்வோம் இத்தவக்காலத்தில். அதற்கான இறையருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

### முதல் வாசக முன்னுரை

சிறுமைப்படுத்தப்படும் தம் மக்களின் நிலைகண்டு பொறுமையாய் இருப்பவர் அல்ல நம் இறைவன். துன்பத்தில் துவளும் தம் மக்களை விட்டு தூரத்தில் இருப்பவர் அல்ல நம் இறைவன். மாறாக வீழ்ந்து கிடக்கும் மக்களைத் தேடிவந்து விடுதலை தருபவர் நம் இறைவன். இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக பாபிலோனியாவிற்கும், அசீரியாவிற்கும் கொண்டு செல்லப்பட்டதிற்கான காரணம் அவர்கள் கடவுளின் கட்டளையை சரிவரக் கடைப்பிடிக்காததால்தான். ஆக, அரசியல் அடிமைத்தனத்திற்கு காரணமாக இருப்பது ஆன்மீக வாழ்வில் விடுதலை பெறாமல் இருப்பதே என்பதை உணர்ந்து இத்தவக்காலத்தில் நமது பாவங்களை எடுத்துச் சொல்லி இறைமன்னிப்பையும், இரக்கத்தையும் நிறைவாகப் பெற்று ஆன்மீக சமூக அடிமைத்தனத்திலிருந்தும், பாவ அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற்று வாழ அருள் வேண்டுவோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பாவிகளின் மேல் இறைவன் இரக்கம் காட்டுகிறார். இவ்விரக்கத்தின் வழி நம் அனைவருக்கும் மீட்பு கிடைக்கிறது. இறைவனின் இவ்விரக்கச் செயலுக்கும் நாம் நன்றியுள்ளம் படைத்தவர்களாயிருக்க வேண்டுமெனில் மீட்பும் பெற்றோருக்குரிய நற்செயல்கள் புரிபவர்களாக வாழ வேண்டும் என்பது இன்றைய இரண்டவாது வாசகத்தின் கருத்து. எனவே இத்தவக்காலத்தில் தீமை விடுத்து, நற்செயல்களை செய்து இறைவனின் மீட்புக்குரிய மக்களாக வாழ்வோம். அதற்கான இறையருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இத்தவக்காலத்தில் செபம், தவம் மற்றும் தானம் என்னும் நற்காரியங்களின் வழியாக உமது மீட்பையும், மன்னிப்பையும் பெற்று விடுதலையின் மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா எங்களது சமூகத்தில் இருக்கின்ற சமய, சாதி, மொழி, நிற வேறுபாடுகள் மறந்து எல்லாரும் ஒற்றுமையோடும், சகோதரத்தோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது பாவங்களுக்காக மனம்வருந்தி ஒப்புரவு என்கின்ற அருட்சாதனத்தை பெற்று உம்மோடும் எங்கள் அயலாரோடும் ஒப்பரவாகி உயிர்ப்பின், நம்பிக்கையின் மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, இயற்கையின் சீற்றத்தாலும், வன்முறைகளாலும், நோயினாலும் தங்களது உறவுகளை இழந்து நம்பிக்கையின்றி வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் இத்தவக்காலத்தில் நம்பிக்கையின் அடையாளமாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, குடிப்பழக்கத்திற்கும், போதை பழக்கத்திற்கும் பல்வேறு தீமைகளுக்கும் அடிமைகளாக இருக்கின்ற ஒவ்வொருவர் மேலும் இரக்கம் கொண்டு பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் வாழ அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## தவக்காலம் 5-ம் ஞாயிறு (17.03.2024)

எரே 31:31-34 எபி 5:7-9 யோவா 12:20-33

**முன்னுரை**

ஆதாம் வழியாக தொடங்கப்பட்ட இறை-மனித உறவு சீனாய் மலையில் நடந்த பழைய உடன்படிக்கை வழியாக வளர்ச்சி பெற்று, கல்வாரி மலையில் நடந்த உடன்படிக்கையில் நிறைவு பெற்றது. பழைய உடன்படிக்கையில் நடந்தது போல ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் அல்ல மாறாக தன்னையே கல்வாரிக் குன்றில் தகனப் பலியாக ஒப்புக்கொடுத்து தன் சொந்த இரத்தத்தை சிந்தியதன் மூலம் புதிய உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து ஏற்படுத்தினார்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும் மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும் என்று இயேசு சொன்னதோடு மட்டுமல்லாமல் தன்னை கோதுமை மணியாக பலியாக்கி மீட்பு என்ற பலனைப் பெற்றுத் தந்தார். இறைமகன் இயேசு தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்கும் மாபெரும் நிகழ்வுதான் திருப்பலி. புதிய உடன்படிக்கையான இத்திருப்பலியில் இயேசு தன்னையே மனமுவந்து பலியாக, உலகிற்கு வாழ்வுதரும் பலியாக ஒப்புக்கொடுக்கிறார். இதைவிட சிறந்த பலியும், வாழ்வு தருகின்ற பலியும் உலகில் வேறு எதுவும் இல்லை. இப்படிப்பட்ட மாண்புமிக்க திருப்பலியில் பங்கு பெறுகின்ற நாம் ஒவ்வொருவருமே இயேசுவைப் போல நம்மையே முழுமையாக பலியாக்க அழைக்கப்படுகிறோம். நம்மையே பலியாக்குவது என்பது நமது சுய விருப்பத்தை புறம் தள்ளிவிட்டு இறைவனின் விருப்பத்தை வாழ்வாக்குவது. எனவே இறைவா உமது திருவுளத்தை நிறைவேற்ற எனக்குக் கற்பியும் என்று செபிப்போம் இத்திருப்பலியில்.





## முதல் வாசக முன்னுரை

விவிலிய ஆன்மீகத்தின் சிகரம் போன்றது இன்றைய முதல் வாசகம். பழைய உடன்படிக்கையை இஸ்ரயேலர் மீறி முறித்துப் போட்டனர். எனினும் இறைவன் மனம் தளரவில்லை. புதியதொரு உடன்படிக்கையை உருவாக்குகிறார். நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும் என்பதன் மூலம் இறை-மனித உறவு வெறும் வெளிச்சட்டங்களை அனுசரிப்பதில் அமையாது, மாறாக உள்ளத்தை தொடுவதாய் அமைந்து வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதாய் அமைய வேண்டும் என்பது பொருள்படுகிறது. ஆகவே, இத்தவக்காலத்தில் இறைவார்த்தையை கேட்டு அதை உள்ளத்தில் நிறுத்தி தியானித்து வாழ்வாக்கி வாழ்வில் மாற்றம் பெற்று வாழ அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் வாழ்வைச் செபவாழ்வு என்றும் கூறலாம். திருமுழுக்கின்போது செபித்தார், சோதிக்கப்படுமுன் செபித்தார், பொதுப்பணியின் முன்பும், பணியின்போதும் செபித்தார், சிறப்பாகத் தம் பாடுகளுக்கு முன் செபித்தார். இயேசுவின் இச்செபமானது நம் தலைமைக்குரு தாம் பலியிடப்படுவதற்கு முன் செய்த உருக்கமான செபம். உரத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார். இயேசுவின் செபம் நமக்கு முன்மாதிரியாக அமையுமா? இயேசுவைப் போல நாமும் செபிப்போம் இத்தவக்காலத்தில்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இத்தவக்காலத்தில் இறைவனது இரக்கத்தையும், மீட்பையும் பெற்று புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் சின்ன சின்ன தவமுயற்சிகளை மேற்கொண்டு எங்களது சுய விருப்பங்களை அறவே அழித்துவிட்டு உமது திருவுளத்தை நிறைவேற்றி உமது அன்புக்குரிய மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, இம்மனமாற்றத்தின் காலத்திலே நாங்கள் ஒவ்வொருவரும் செபத்தின் அவசியத்தையும் அதன் ஆற்றலையும் உணர்ந்து ஒவ்வொரு நாளும் உம் மகன் இயேசுவைப் போல